1973 மார்ச் 21]

பாலைக் கறந்துவிட்டு பிறகு மாடுகளைப் பற்றிவிட்டு விடுகிறார்களே, அதேபோல் முதலாளிகள் இந்தத் தொழிலாளிகளை அப்படி அனுப்பிவிடுகிறார்கள். அந் நிலையை மாற்றியமைத்து அந்தத் தொழிலாளிகள் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்கும் விதத்தில் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பொத்தாம் பொதுவாகச் சொல் லாமல் குறிப்பிட்ட இடத்தில் இப்படி நடைபெறுகிறது என்று தெரிவித்தால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 453. **வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரிப்பேட்டைத் துணை வட்டம், இலச்சிவாக்கம் அரிசனக் காலனியில் வீட்டு மனை இன்றி இருக்கும் ஏழை அரிசனங்களுக்கு வீட்டு மனை ஆர்ஜிதம் செய்து தருவதில் ஏற்படும் தாமதத்திற்குக் காரணங்கள் யாவை?

(இ) இவ்வேலை எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) நில உரிமை பெறும் மத்திய அரசு சட்டத்தின், பிரிவு 6-ன்கீழ் விளம்பர வரைவு ஏற்கப் பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது. விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன்: இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவாவது அவர் களுக்குப் பட்டா வழங்குவதற்குச் சிறப்பு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நலத்துறை இயக்குநர் அவர் கள் அரசிடம் நிதிப் பற்றாக்குறை காரணமாக கூடுதலான தொகை கேட்டிருக் கிறார்கள். 15 லட்சம் ரூபாய் கேட்டிருக்கிறார்கள். அதைக் கொடுத்துவிட்ட பிறகு நிச்சயமாகப் பட்டா வழங்கப்படும்.

* 454. **வினா—திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுகா சூரப்பள்ளி கிராமத்தில் குப்பம்பட்டி அரிசனச் சேரியை மாற்றுவதற்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் வேறு யாராவது ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா?

(இ) ஆம் எனில், அவர்களை வெளியேற்றுவதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, குப்பம்பட்டி கிராமத்தில் அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட புறம்போக்கு நிலத்தை ஒரு செட்டியார் ஒரு கவுண்டருக்கு விற்று விட்டு, அந்த நிலத்தைப் பட்டா செய்துகொண்டு
மு.ப. 9-30 விட்டார். அதனல் அந்தக் குப்பம்பட்டி ஜனங்களுக்கு நிலப்பட்டா ஒதுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அரிசனங்கள் தற்போது 85/2 எண் இடத்தில் குடியிருக்கிருர்கள். அங்கேயிருக்கும் 43/2 சர்வே எண்ணுள்ள இடத்தைக் கையகப்படுத்த வேண்டுமென்று தாசில்தார் நடவடிக்கை எடுத்து வருகிருர்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற அந்த கவுண்டர் இருக்கக் கூடிய இடம் நிலம் சர்வே எண் 84/6 என்பதுதான். அது திருமதி முனியம்மாள், பெரியதம்பி கவுண்டர் மனைவிக்குக் கொடுக்கப்பட்டது. அரிசனங்கள் இருக்கும் இடம் மந்தைவெளிப்புறம்போக்காக இருக்கிறது. அதை வில்லேஜ் புறம்போக்காக மாறுவதற்கு தாசில்தார் ஈடுபட்டு இருக்கிருர். அதன்பிறகு அந்த இடம் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்த நிலப்பட்டா செய்து கொடுத்ததற்குப் பின்னல் அங்கே ஆர்.டி.ஓ. சென்று, செய்தது தவறு என்று சொல்லி, அவர்களுக்குச் சமாதானமாக ஊக்கம் கொடுத்து, சமாச முயற்சிமூலம் அந்த நிலங்களை எடுக்க அந்தப் பிரச்னை இன்வஸ்டிகேஷனில் இருந்து கொண்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற நிலம் வேறு. அது 84/6 என்கிற சர்வே நெ. 84/85 என்கிற சர்வே நெம்பர். இந்த இரண்டு இடத்தையும்தான் ஒருவர் சென்று அதை கையகப் படுத்தியிருக்கிருர். திருமதி முனியம்மாள் பெரியதம்பி கவுண்டரின் மனைவி 2 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கி இருக்கிருர். அந்த இடத்தைச் சர்க்காரிடம் கொடுக்க மாட்டேன் என்று சொல்லியிருக்கிருர். பிறகு டி.ஆர்.ஓ. சென்று விலைக்கு வாங்கிவிட்ட பிறகு அதைக் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்லிக் கொடுத்திருக்கிருர். அரிசனங்கள் இருக்கும் 43/2 சர்வே எண்ணுள்ள இடத்தை 2.65 ஏக்கர் நிலம் அதை நான் முன்னலே குறிப்பிட்டதுபோல் வில்லேஜ் புறம் போக்காக மாற்றிப் பட்டா வழங்க இருக்கிருர்கள். அது விரைவில் வழங்கப் படும்.